# வித்யாமலர்
## மொட்டு - I

Vidyarambam Trust

Academic Year
2025 - 2026

**Children - 23,629**

**Villages - 166**

**Tutors - 245**

VIDYARAMBAM TRUST

June - October
2025




**Head Office:**
Old No. 10/2, New No. 25,
First Main Road,
Kasturba Nagar, Adyar,
Chennai – 600 020

Email: vidyarambam@gmail.com
Website: www.vidyarambam.org
Phone: 9444018590


V I D Y A R A M B A M T R U S T

## உள்ளடக்கம்

1. துவங்கப்பட்ட திட்டங்கள்......... 02

2. மாவட்டங்கள் வாரியாக திட்டங்கள்......... 03

3. பயிற்சி வகுப்புகள்............. 04

4. மையங்கள் திறப்பு............. 06

5. முதல் நிலை தேர்வுகள்........... 07

6. செயல்திறன் வரைபடம்............ 08

7. நடமாடும் விளையாட்டு வாகனம்......... 11

8. பொது நிகழ்வுகள். ............ 12

9. விமர்சன சான்றிதழ்கள்............ 18

10.ரோட்டரி வித்யாரம்பம் பள்ளியின் நிகழ்வுகள்...23

## 2025 – 2026 ல் துவங்கப்பட்ட திட்டங்கள்

இந்த கல்வி ஆண்டிற்கான வித்யாரம்பம் மையங்கள், ஜூன் மாதம் துவங்கப்பட்டன. 10 மாவட்டங்களில், 26 தாலுக்காக்களில், 166 கிராமங்களில், உறுதுணைக்கல்வி திட்ட மையங்களும், 69 பள்ளிகளில் எளிய வழியில் ஆங்கிலம் பயிலும் திட்டங்களும் துவங்கப்பட்டன. மேலும் மையங்கள் நடத்தும் கிராமங்களில் நூலகங்களும் மற்றும் நடமாடும் விளையாட்டு வாகனமும் துவங்கப்பட்டன. 23,629 குழந்தைகள் வித்யாரம்பம் அறக்கட்டளை திட்டங்களில் இணைந்துள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 189 அரசுப் பள்ளிகளில் இந்த வருடம் நமது திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

16,408 குழந்தைகளுக்கு உறுதுணைக்கல்வி திட்டத்திற்கான முன்னறிதேர்வு நடத்தி, அவர்களின் கல்வி திறனுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளனர். திறனுக்கேற்ப, நமது தொண்டர்கள் 245 பேரும் குழந்தைகளுக்கு பயிற்சியை வழங்குகின்றனர்.













# மாவட்டங்கள் வாரியாக திட்டங்கள்

## Kanyakumari District

VT Covered Blocks :
- ✓ Agastheeswaram
- ✓ Rajakkamangalam
- ✓ Thakkalai
- ✓ Mel puram
- ✓ Kiruthancode

VT Covered Villages : 24
VT Covered Schools : 25
CENTERS :
- KIDS – 04
- SCJ – 04
- SCS – 04
- SMLC – 24
- LIBRARY – 03
- ELE - 05

## Tirunelveli District

VT Covered Blocks :
- ✓ Nanguneri
- ✓ Radhapuram
- ✓ Vallioor

VT Covered Villages : 24
VT Covered Schools : 27
CENTERS :
- SCJ – 01
- SCS – 01
- SMLC – 18
- LIBRARY – 09
- ELE – 13

## Thoothukudi District

VT Covered Blocks :
- ✓ Sathankulam
- ✓ Alwarthirunagiri

VT Covered Villages : 03
VT Covered Schools : 04

CENTERS :
- SMLC – 03
- LIBRARY – 01
- ELE – 02

## Tenkasi District

VT Covered Blocks :
- ✓ Sankarankovil
- ✓ Kuruvikulam
- ✓ Melaneelithanallur
- ✓ Vasudevanallur
- ✓ Thiruvengadam

VT Covered Villages : 30
VT Covered Schools : 36

CENTERS :
- KIDS – 13
- SCJ – 14
- SCS – 15
- SMLC – 21
- LIBRARY – 33
- ELE – 14

## Madurai District

VT Covered Blocks :
- ✓ Melur

VT Covered Villages : 03
VT Covered Schools : 03

CENTERS :
- KIDS – 04
- SCJ – 02
- SCS – 03
- LIBRARY – 03

## Trichy District

VT Covered Blocks :
- ✓ Pullambadi
- ✓ Lalkudi

VT Covered Villages : 24
VT Covered Schools : 27
CENTERS :
- KIDS – 03
- SCJ – 03
- SCS – 03
- SMLC – 17
- LIBRARY – 10

## Ariyalur District

VT Covered Blocks :
- ✓ Thirumanur

VT Covered Villages : 12
VT Covered Schools : 14
CENTERS :
- SMLC – 15
- LIBRARY – 06
- ELE – 09

## Mayiladuthurai District

VT Covered Blocks :
- ✓ Sirkali
- ✓ Kollidam
- ✓ Sembanarkoil
- ✓ Mayiladuthurai

VT Covered Villages : 27
VT Covered Schools : 28
CENTERS :
- KIDS – 07
- SCJ – 07
- SCS – 05
- SMLC – 19

## Chengalpat District

VT Covered Blocks :
- ✓ Kattankulathur

VT Covered Villages : 05
VT Covered Schools : 07

CENTERS :
- SMLC – 05
- ELE – 04

## Chennai

VT Covered Blocks :
- ✓ Thiru.vi.ka.nagar
- ✓ Kodambakkam
- ✓ Adyar

VT Covered Villages : 09
VT Covered Schools : 12

CENTERS :
- ELE – 12

## Dindigul District

VT Covered Blocks :
- ✓ Authur


VT Covered Villages : 05
VT Covered Schools : 06
CENTERS :
- KIDS – 01
- SCJ – 01
- SCS – 04
- SMLC – 03
- LIBRARY – 03
- ELE – 03


# நிகழ்வுகள்

## பயிற்சி வகுப்புகள்

### முதல் பருவப் பாடத்திட்டத்திற்கான கலந்தாய்வு

09.06.2025 அன்று **முதல் பருவப் பாடத்திட்டம்** மற்றும் பயிற்சிக்கான கலந்தாய்வு **Google meet** மூலம் நடைபெற்றது. இதில் பொது மேலாளர் அவர்கள், திட்ட இயக்குனர் அவர்கள் ஒருங்கிணைப்பாளர்கள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் அலுவலகத் தொண்டர்களும் கலந்து கொண்டார்கள். இந்த வருட புத்தகத்தில் ஒரு சில தலைப்புகளில் மாற்றம் இருப்பதால் பாடத்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது.





### SMLC, KIDS, SCJ & SCS – திட்டப்பயிற்சி (Term –I)

17.06.2025 **முதல்** 29.06.2025 **வரை திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, மதுரை, திருச்சி, திண்டுக்கல், அரியலூர், மயிலாடுதுறை மற்றும் சென்னை** ஆகிய மாவட்டங்களில் வித்யாரம்பம் கிளை அலுவலகத்தில் **முதல் பருவத்திற்கான பயிற்சி** நடைபெற்றன.

முதல் நாள் வித்யாரம்பம் ஸ்தாபகர் மறைதிரு. ரெங்கநாதன் ஐயா அவர்களைப் பற்றியும், வித்யாரம்பத்தின் தோற்றம் மற்றும் நோக்கம் பற்றியும் பேசப்பட்டது. ஒவ்வொரு நாளும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பிக்கப்பட்டு யோகா, பாடல்கள் மற்றும் விதைகள் விதைக்கப்பட்டு பயிற்சி பசுமையாக ஆரம்பிக்கப்பட்டது.



முதலில் வித்யாரம்பம் உபகரணங்களை பயன்படுத்தி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. முதல் நாளில் மழலையருக்கான பயிற்சியும், இரண்டாவது நாள் இளநிலை உறுதுணைக் கல்விக்கான பயிற்சியும், மூன்றாவது நாள் முதுநிலை உறுதுணைக் கல்விக்கான பயிற்சியும் கொடுக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் பொது மேலாளர் அவர்கள் வீடியோகாணொலி மூலம் பயிற்றுனர்களிடம் கலந்துரையாடினார்கள்.








## ELE - திட்டப்பயிற்சி

**26.06.2025 முதல் 08.07.2025 வரை திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, திருச்சி, திண்டுக்கல், அரியலூர், மயிலாடுதுறை செங்கல்பட்டு மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் முதல் பருவத்திற்கான** ELE பயிற்சி அளிக்கப்பட்டது. Phonemes, Blending process, Ending words, Homophones, Compound word, Noun – Kinds of noun, Adjectives, Verb, Adverb, Numbers, Pronoun, Articles and Simple tense ஆகிய பாடங்கள் வரை பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு நாள் பயிற்சியின் முடிவில் ஆசிரியர்களுக்கு தேர்வு வைக்கப்பட்டு, ஆசிரியர்களின் திறன் அறியப்பட்டது.






## Toy van - பயிற்சி

**24.06.2025** மற்றும் **25.06.2025** ஆகிய இரு தினங்களில் காலை 10.30 மணியளவில் சங்கரன்கோவில் கிளை அலுவலகத்தில் **மொபைல் டாய் லைப்ரரி (Toy van)** பொருள்கள் பற்றிய பயிற்சி, பயிற்றுனர்களுக்கும் மற்றும் தொண்டர்களுக்கும் அளிக்கப்பட்டது. இதில் 2 பயிற்றுனர்கள் மற்றும் 7 தொண்டர்கள் கலந்து கொண்டனர். குழுவில் விளையாடி ஆர்வமுடன் கற்றுக்கொண்டனர்.




## முதல் பருவத்திற்கான தொடர் பயிற்சி


**30.08.2025 மற்றும் 01.09.2025 வரை** அனைத்து மாவட்டங்களிலும் **KIDS, SCJ, SCS** மற்றும் **SMLC** பயிற்றுனர்களுக்கு **I -Term Follow up Training** நடைபெற்றது. இதில், **MDU Area** பயிற்றுனர்கள் **Google Meet** மூலம் கலந்து கொண்டார்கள்.





## மையங்கள் திறப்பு

**23.06.2025** அன்று **சித்தமல்லி கிராமத்தில் SMLC** மற்றும் **ELE** வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு, முதல் நிலை சுற்று எடுக்கப்பட்டது.


**02.07.2025** முதல் **ஜுலை இறுதி வாரம் வரை திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, மதுரை, திருச்சி, திண்டுக்கல், அரியலூர், மயிலாடுதுறை, செங்கல்பட்டு மற்றும் சென்னை** ஆகிய மாவட்டங்களில் மழலையர், இளநிலை, முதுநிலை உறுதுணை கல்வி மையங்கள், பள்ளி தலைமை ஆசிரியர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டன.









## நூலகங்கள் திறப்பு

**ஜூலை** மாதத்திலிருந்து அனைத்து மாவட்டங்களிலும் **Library** மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வாரத்தில் ஒரு நாள் (வெள்ளிக்கிழமை) அன்று குழந்தைகள் புத்தகங்களை வாங்கி படித்து மகிழ்கின்றனர்.



## ELE வகுப்புகள் - திறப்பு

**ஜூலை** மாதத்திலிருந்து **திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சி, திண்டுக்கல், அரியலூர், தென்காசி, மயிலாடுதுறை, செங்கல்பட்டு** மற்றும் **சென்னை** ஆகிய மாவட்டங்களில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்காக ELE மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.












## முதல் நிலை முன்னறி தேர்வு

**ஜூலை மாதம்** இறுதி இரண்டு வாரங்களில் **திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, மதுரை, தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல், அரியலூர், மயிலாடுதுறை மற்றும் செங்கல்பட்டு** ஆகிய மாவட்டங்களில் உள்ள இளநிலை மையம் மற்றும் முதுநிலை உறுதுணை மையக் குழந்தைகளுக்கு **ஆரம்ப நிலை** சுற்று எடுக்கப்பட்டது.





## ELE – முதல் நிலை தேர்வு


**ஜூலை மாதம்** இறுதி இரண்டு வாரங்களில் **திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல், அரியலூர், மயிலாடுதுறை, சென்னை** மற்றும் **செங்கல்பட்டு** ELE மையங்களில் உள்ள மாணவர்களுக்கு, முதல் பருவத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்டது.








# LEARNING CENTERS PRE TEST- PERFORMANCE GRAPH


## JUNIOR










## SENIOR









## EASY LEARNING ENGLISH








## EASY LEARNING ENGLISH - CHENNAI





| S.NO. | SKILL | DESCRIPTION |
|---|---|---|
| 1 | Nothing | can read only a few words |
| 2 | Word | can read a few sight words |
| 3 | Nouns | can identify the nouns in a sentence |
| 4 | Kinds of Nouns | can identify the Kinds of nouns in a sentence |
| 5 | Singular & Plural | can identify the Singular & Plural in a sentence |
| 6 | Adjectives | can identify the Adjectives in a sentence |
| 7 | Verbs | can identify the verbs ("be form"and action verbs ) in a sentence |
| 8 | Adverbs | can identify the Adverbs in a sentence |
| 9 | Identify Tenses | can identify the present tense and the past tense in a sentence with 'be form' verbs ( SVC Pattern ) |
| 10 | Reframe Jumbled Words | can frame a simple sentence from the jumbled words with 'be form' verbs ( SVC Pattern ) |
| 11 | Reading a Passage | can read a given passage |
| 12 | Absent | who had not attended the test |
| 13 | Others | Ied, Long absent, Tc, Left.. ect |




| S.NO. | SKILL | DESCRIPTION |
|---|---|---|
| 1 | Nothing | can read only a few words |
| 2 | Word | can read a few sight words |
| 3 | Kinds of Nouns | can identify the Kinds of Nouns in a sentence |
| 4 | Adjectives - Articles | can identify the Adjectives in a sentence |
| 5 | Verbs, Adverbs | can identify the Verbs ('be form' & regular verbs) and Adverbs in a sentence |
| 6 | Phrasal Verbs | can identify the Phrasal verbs in a sentence |
| 7 | Prepositions, Conjuctions | can identify Prepositions and Conjunctions (coordinating conjunctions) in a sentence |
| 8 | Tenses | can identify the present and the past tense with 'be form' & regular verbs in SVC, SVO, SVA Patterns |
| 9 | Kinds of Sentences | can identify the four Kinds of Sentences |
| 10 | Framing a Simple Sentence | able to frame a simple sentence with 'be form' verbs ( SVC Pattern ) |
| 11 | Reading a Passage | can read a given passage |
| 12 | Absent | who had not attended the test |
| 13 | Others | Ied, Long absent, Tc, Left.. ect |




| S.NO. | SKILL | DESCRIPTION |
|---|---|---|
| 1 | Nothing | can read only a few words |
| 2 | Word | can read a few sight words |
| 3 | Parts of Speech | can identify the parts of speech in a sentence |
| 4 | Phrasal verbs | can identify the Phrasal verb in a sentence |
| 5 | Tenses | can identify the present tense and the past tense with 'be form' and regular verbs ( SVC , SVO, SVA Patterns ) |
| 6 | Question tag | can add a question tag to the given statement |
| 7 | Sentence Pattern | can identify the SVC , SVO, SVA Sentence Patterns |
| 8 | Kinds of Sentences | can identify the four Kinds of Sentences |
| 9 | Reading a Passage | can read a given passage |
| 10 | Transformation of Sentences | can change the Positive sentence into the Negative sentence (SVC Pattern) |
| 11 | Framing a Simple sentences | able to write a simple sentence with 'be form' verbs ( SVC Pattern ) |
| 12 | Phrases and clauses | can distinguish between a phrase and a clause in a sentence |
| 13 | Comprehension | can comprehend a given passage. |
| 14 | Absent | who had not attended the test |
| 15 | Others | Ied, Long absent, Tc, Left.. ect |




| S.NO. | SKILL | DESCRIPTION |
|---|---|---|
| 1 | Nothing | can read only a few words |
| 2 | Word | can read a few sight words |
| 3 | Parts of Speech | can identify the parts of speech in a sentence |
| 4 | Phrasal verbs | can identify the Phrasal verb in a sentence |
| 5 | Tenses | can identify the present tense and the past tense with 'be form and regular verbs ( SVC , SVO, SVA Patterns ) |
| 6 | Question tag | can add a question tag to the given statement |
| 7 | Sentence Pattern | can identify the SVC , SVO, SVA Sentence Patterns |
| 8 | Kinds of Sentences | can identify the four Kinds of Sentences |
| 9 | Reading a Passage | can read a given passage |
| 10 | Transformation of Sentences | can change the Positive sentence into the Negative sentence (SVC Pattern) |
| 11 | Framing a Simple sentences | able to write a simple sentence with 'be form' verbs ( SVC Pattern ) |
| 12 | Phrases and clauses | can distinguish between a phrase and a clause in a sentence |
| 13 | Comprehension | can comprehend a given passage. |
| 14 | Absent | who had not attended the test |
| 15 | Others | Ied, Long absent, Tc, Left.. ect |





## MOBILE TOY LIBRARY

**16.06.2025** அன்று தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் கிளை அலுவலகத்திலிருந்து, **மொபைல் டாய் லைப்ரரி (Toy Van)** பள்ளிகளுக்கு சென்று, இக்கல்வியாண்டில் தனது கல்விப்பணியை தொண்டர்கள் ஆர்வமுடன் தொடங்கினார்கள்.

வித்யாரம்பத்தின் கற்றல், கற்பித்தல் உபகரணங்களை கொண்ட நடமாடும் விளையாட்டு வாகனம், தென்காசி மாவட்டத்தை சுற்றியுள்ள பல பள்ளிகளுக்கு தினமும் சென்று 1 முதல் 8ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு, நமது இரு பயிற்றுநர்களால், கல்வி உபகரணங்கள் மூலம் விளையாட்டு முறையில் கற்பித்தல் பணியை மேற்கொண்டு வருகிறது. இதில் உள்ள கல்வி உபகரணங்கள் குழந்தைகளின் கற்றல் திறன்களையும், ஒருங்கிணைப்பு திறன்களையும் மேம்படுத்துவதாக உள்ளதோடு, கணித செயல்பாடுகளை மிக விரைவில் செய்யக் கூடிய சிறந்த பயிற்சிக்கான உபகரணங்களையும் கொண்டுள்ளது.



### 2025 - 2026

| Sl.No. | Month | Total No. of Schools | Total No. of Children |
|---|---|---|---|
| 1 | June | 10 | 307 |
| 2 | July | 32 | 1370 |
| 3 | August | 39 | 1443 |
| 4 | September | 46 | 1420 |
| 5 | October | 26 | 876 |
| | Total | 153 | 5,416 |







## பொது நிகழ்வுகள்

### ULLAS TRUST - Meeting

**25.06.2025 ULLAS தொண்டு நிறுவனத்தின்** அலுவலகத்திலிருந்து **திருமதி. பார்வதி** அவர்கள், **செல்வி. சுவர்ச்சலா** அவர்களும் சென்னை அலுவலகத்திற்கு வருகை புரிந்தனர்.



### SUMMIT & TTS Program Training

**02.07.2025** அன்று திருநெல்வேலி மாவட்டம் **வித்யாரம்பம் அறக்கட்டளையின் கிளை அலுவலகத்தில்** வைத்து, ஒருங்கிணைப்பாளர் அவர்களின் தலைமையிலும், **ULLAS அறக்கட்டளையின்** சார்பாக **செல்வி. சுவர்ச்சலா** அவர்களின் தலைமையிலும், **Touch the Soil Program Training** நடைபெற்றது. தென்காசி மாவட்டம் சார்பாக 5 தொண்டர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுக்கொண்டனர்.





05.07.2025 அன்று **ULLAS Trust** லிருந்து **திருமதி. சவிதா** அவர்கள் மற்றும் **திரு. தேவ்ஆனந்த்** அவர்கள் இருவரும் வருகைபுரிந்து வெள்ளனூர் ஊ.ஒ.நடுநிலை பள்ளியில் **SUMMIT & TTS Program** –ற்கான பயிற்சி அளித்தார்கள். இதில் திருச்சி மற்றும் அரியலூர் மாவட்ட 26 பயிற்றுநர்கள் கலந்துக் கொண்டார்கள். மேலும் மயிலாடுதுறை மாவட்ட தொண்டர்கள் Online மூலம் கலந்துக்கொண்டனர்.



## Summit Classes

### திருச்சி மாவட்டம்

**29.07.2025 முதல் 11.09.2025 வரை** திருச்சி மாவட்டத்தில் உள்ள 6 பள்ளிகளில், 5 நாட்கள் Summit Class எடுக்கப்பட்டு, Scholarship Programme நடத்தப்பட்டது.




### திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டம்

**28.07.2025 முதல் 02.09.2025** வரை 11 பள்ளிகளில் Summit 1 & 2 classes நடத்தப்பட்டது. அதில் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு – Can do workshop, Ullas – Code of conduct, Warm up, Small stories, Memory game – Link techniques, Visual techniques, Mind Map, Noun, Kinds of noun, Verb, Preposition, Singular plural – Male and Female, Last day – Activities நடத்தப்பட்டது.

10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு Planning Workshop, Games, Inspirational stories, Time management, Time table, Decision making. ஆகிய தலைப்புகளில் 5 நாட்களுக்கு வகுப்பு எடுக்கப்பட்டது.




**08.09.2025 முதல் 10.09.2025 வரை** 11 பள்ளிகளில் **110** மாணவர்களுக்கு சான்றிதழும், காசோலையும் வழங்கப்பட்டது.








## மயிலாடுதுறை மாவட்டம்

**31.07.2025 முதல் 06.08.2025 வரை** திருநகரி அரசு உயர்நிலைப் பள்ளியில் 9 –ம் வகுப்பு மாணவர்களுக்கு Ullas Trust - Summit class நடத்தப்பட்டது.




**08.09.2025 முதல் 12.09.2025 வரை** மேலச்சாலை, திருவெண்காடு, அகரபெருந்தோட்டம், மணல்மேடு, கடலங்குடி, திருமங்கலம், திருக்கடையூர், மயிலாடுதுறை நகராட்சி, கூறைநாடு மற்றும் தரங்கம்பாடி ஆகிய பள்ளிகளில், சீர்காழி கிளை அலுவலக தொண்டர்கள் சென்று, **Touch the Soil Program** நடத்தினர். 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களில், முதல் மதிப்பெண் பெற்ற 5 மாணவர்களை தேர்வு செய்து, தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.
















## தென்காசி மாவட்டம்

**04.08.2025** முதல் **08.08.2025** வரை ரெங்க சமுத்திரம், வென்றிலிங்கபுரம், பெரிய கோவிலாங்குளம், சங்கரன் கோவில் ஆகிய கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில், ULLAS அறக்கட்டளை மூலம் **Touch the soil** பாடத்திட்டம் நமது தொண்டர்களால் நடைபெற்றது. தலைவர்களைப் பற்றி கேட்கின்ற கேள்விகளுக்கு மாணவர்கள் ஆர்வமுடன் பதிலளித்தனர். தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.







## சுதந்திர தின விழா

15.08.2025 அன்று **அனைத்து மாவட்டங்களிலும் தொண்டர்கள் மற்றும் மைய ஆசிரியர்களும்** இணைந்து அரசு பள்ளிகளில் சுதந்திர தின விழா கொண்டாடினர்.







## FOUNDER'S DAY

27.08.2025 அன்று அனைத்து வித்யாரம்பம் கிளை அலுவலகத்திலும் வித்யாரம்பம் நிறுவனர் **திரு. V. ரெங்கநாதன் ஐயா** அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.



## VISIT - CHENNAI

**02.09.2025** அன்று ஒருங்கிணைப்பாளர் மற்றும் மதிப்பீட்டாளர் அவர்களும் **சென்னை ELE** மையங்களுக்கு சென்று ஆசிரியர்களின் செயல்முறைகளை மதிப்பீடு செய்தனர்.





## VILLAGE DEVELOPMENT GROUP

### மயிலாடுதுறை மாவட்டம்

**25.07.2025** அன்று எடமணல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியர், உதவி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மதிப்பீட்டாளர்கள், மைய ஆசிரியர் மற்றும் குழந்தைகள் முன்னிலையில் பெற்றோர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில், பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள், வித்யாரம்பம் ஆசிரியர்கள் கற்றல் உபகரணங்களை வைத்து பாடம் நடத்தும் விதம் குழந்தைகளுக்கு எளிதில் புரிந்து கொண்டு படிப்பதற்கு உதவியாக இருக்கிறது என்றும், கதை, பாட்டு, Phonic Sound, தமிழ் மற்றும் கணக்கு அனைத்தும் நன்றாக கற்றுக் கொடுக்கிறார்கள் என்றும் வித்யாரம்பத்தை, பாராட்டினார்.





### கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 10.09.2025, 12.09.2025, 20.09.2025 ஆகிய நாட்களில் குலசேகரபுரம், தென்தாமரைகுளம், இரவிப்புதூர் ஆகிய மையங்களில் கிராம முன்னேற்ற கூட்டம் நடைபெற்றது. 80 நபர்கள் கலந்துகொண்டார்கள்.







## திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் **29.08.2025** அன்று ஆயர்குளம், காடன்குளம், வடக்கு விஜய நாராயணம் ஆகிய இடங்களில் VDG Meeting நடத்தப்பட்டது. 90 நபர்கள் கலந்துகொண்டார்கள். இக்கூட்டத்தில், எப்படி வித்யாரம்பம் ஆரம்பிக்கப்பட்டது, அதன் நோக்கம், என்னென்ன திட்டங்கள் செயல்பட்டு வருகிறது, குழந்தைகளின் முன்னேற்றத்தின் பங்கு ஆகியவற்றை பற்றி பேசப்பட்டது.












## TESTIMONIALS

### Mayiladuthurai District



அனுப்புதல்,

ப. ஆரோக்கியமேரி,
தலைமை ஆசிரியர்,
ஊ. ஒ. நடுநிலைப்பள்ளி,
காத்திருப்பு.

பெறுதல்,

வித்யாரம்பம்
கல்வி அறக்கட்டளை
சென்னை.

ஐயா,

தங்கள் அறக்கட்டளை மூலமாக காத்திருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயிலும் (தமிழ் வழி) மாணவ, மாணவிகள் 151 பேருக்கு திருமதி. சுசிதா, திருமதி. தீபா இருவரும் சிறப்பாக பயிற்சி அளித்து, இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு செயல்பாடுகள் செய்து காட்டல் மூலமாகவும், துணைக்கருவிகள் கொண்டும், மாணவர்களுக்கு எளிதில் புரியும் படி கற்பித்தல் பணியினை சிறப்பாக செய்து வருகிறார்கள்.

தங்களின் மேலான இந்த ஒத்துழைப்பினால் எம் பள்ளியின் கற்றல் தரம் உயரும் என்பதில் ஐயமில்லை. கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் ஆசிரியர்களை நியமனம் செய்து எம் பள்ளி மாணவர்களுக்கு கற்பிக்க கல்வியில் மேன்மை பெற உதவியமைக்கு தங்களுக்கு மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.


நன்றி.

இடம் : காத்திருப்பு
நாள் : 25/7/25

இப்படிக்கு,

HEAD MASTER
PANCHAYAT UNION MIDDLE SCHOOL,
KATHIRUPPU & (PO), SIRKALI-Tk.,
MAYILADUTHURAI-Dt. Pin- 609 109.

### Tenkasi District



அனுப்புநர் :
தலைமை ஆசிரியர் / செயலர்
நெல்லையப்பர் துவக்கப் பள்ளி
சங்குபுரம் - 627761
வாசுதேவநல்லூர் சரகம், தென்காசி மாவட்டம்
பள்ளி அங்கீகார எண் :
DIS No. 502 / 1948
நாள் : 20.12.1948

பெறுநர் :
நிறுவன தலைவர் அவர்கள்
வித்யாரம்பம் அறக்கட்டளை
சென்னை

அனுப்புநர் : நாள் 23/10/2025

தலைமையாசிரியர்
நெல்லையப்பர் துவக்கப்பள்ளி
சங்குபுரம்

பெறுநர் :

நிறுவன தலைவர் அவர்கள்
வித்யாரம்பம் அறக்கட்டளை
சென்னை.

மதிப்பிற்குரிய ஐயா/அம்மா அவர்கள்


பொருள் : வித்யாரம்பம் டிரஸ்ட் மூலம் எங்கள் பள்ளியின் முன்னேற்றம் சார்பாக.

சங்குபுரம், நெல்லையப்பர் துவக்கப்பள்ளியில் தங்கள் நிறுவனத்திலிருந்து பணியாற்றும் இரண்டு ஆசிரியர்களாலும் எங்கள் பள்ளியில் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கின்றனர் Easy English grammer வகுப்பாக புரிந்துள்ளனர். அதனால் பள்ளியில் கற்கும் ஆர்வம் மிகுந்துள்ளது. இந்த ஆண்டும் தங்களின் சேவையை எங்கள் பள்ளிக்கு தொடர வேண்டும் என பணிவுடன் வேண்டுகிறேன்.

சு. ஆனந்தி
23.12.2025

தலைமை ஆசிரியர்
நெல்லையப்பர் துவக்கப்பள்ளி
சங்குபுரம்

### Ariyalur District



ஊராட்சி ஒன்றிய நடு நிலைப்பள்ளி
வெள்ளஞூர்

அனுப்புநர்
தலைமையாசிரியர்
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வெள்ளஞூர்
பெறுநர்
தலைமை அலுவலகம்
வித்யாரம்பம் அறக்கட்டளை, சென்னை
ஐயா,

1 முதல் 5 வகுப்புகள் பாடம் கற்பிக்க தங்களால் நியமனம் செய்யப்பட்ட திருமதி. ரா. மங்கையர்கரசி என்பாரின் பணி மிகச் சிறப்பாக இருந்தது. மாணவர்கள் எழுத்தறிவு வாசித்தல் மற்றும் எண்ணறிவு பெற உதவியாக இருந்தது.

இவர் பாடம் எடுப்பதை Assessor திருமதி. ர. புவனேஸ்வரி அவர்களும், Co-ordinator திருமதி. ச. ரோசி மரியாள் அவர்களும் வந்து பார்வையிட்டு தக்க வழிகாட்டுதலை வழங்குகிறார்கள்.

வித்யாரம்பம் அறக்கட்டளையின்படி நடத்தப்படும் வகுப்புகளில் ஆங்கில எழுத்துக்களை Phonetic ஒலிகளை கற்றுக்கொடுத்து அதன்மூலம் ஆங்கில எழுத்துக்களை வாசிக்க வைப்பதால் குழந்தைகள் எளிமையாக ஆங்கிலம் கற்பதற்கு உதவியாக இருக்கிறது மற்றும் அடிப்படை எண்களை கற்றுக் கொள்ள எண் அட்டைகள் மற்றும் உதிரி எண்கள் பயன்படுத்தப்படுவதால் குழந்தைகள் எளிதில் எண்களையும், கூட்டல், கழித்தல் கணக்குகளையும் கற்பதற்கு உதவியாக உள்ளது. இதுபோன்று தமிழ் எழுத்துக்களுக்கும், எழுத்து அட்டைகள், உதிரி எழுத்துக்கள், பாடல்கள் மூலம் கற்றுக் கொடுப்பதால் குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்கின்றனர். ஒவ்வொரு நாளும் நடத்தப்படும் பாடத்தை அந்த வாரத்தின் கடைசி நாள் வெள்ளிக்கிழமை Activity ஆக விளையாட வைப்பதால் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் பாடங்களை கற்றுக் கொள்வதோடு எளிமையாக புரியும் வகையிலும் உள்ளது. மேலும் பொது அறிவு பாடலகளும் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதத்தின் கடைசி வாரம் Activity மூலம் அறிவியல் பாடங்களையும் குழந்தைகளுக்கு கற்று கொடுப்பது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. 6,7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு Easy Learning English (ELE) வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முறையால் மாணவர்கள் எளிமையான வகையில் ஆங்கிலம் எழுதவும், வாசிக்கவும் மற்றும் பேசவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த வகுப்புகளில எழுத்து அட்டைகள், சுழற்சி அட்டைகள், Phonemes மற்றும் விளையாட்டு முறையிலும் ஆங்கிலத்தை எளிமையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது.

மேற்கண்ட ஆசிரியரால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் மாணவர்கள் எளிதில் புரிந்துக் கொள்ளும் வகையில் இருந்தது. தங்கள் நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மாணவர்கள் பாடத்தை எளிதில் புரிந்துக் கொள்ளவும், தாங்களே பயன்படுத்தி பாடப் பொருளை கற்றுக் கொள்ளும் வகையிலும் இருந்தது.


மேலும் வரும் காலங்களிலும் எங்கள் பள்ளிக்கு வித்யாரம்பம் அறக்கட்டளை மூலம் ஆசிரியர்களை நியமனம் செய்தால் மேலும் மாணவர்களின் கற்றல் சிறப்படைய உறுதுணையாக இருக்கும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.வெள்ளஞூர் 23/10/2025

இப்படிக்கு,

தலைமை ஆசிரியர்

### Tirunelveli District



நான் அரசு தொடக்கப் பள்ளி, முகிலன்குடி பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் பள்ளியில் வித்யாரம்பம் அறக்கட்டளை சார்பாக திருமதி. T கீதா அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் 3 முதல் 5-ம் வகுப்பிற்கு Senior கல்வியினை பயிற்றுவிப்பதால் எம் மாணவர்கள் சிறப்பாக பிழையின்றி வாசிப்பதிலும் எழுதுவதிலும் திறமையாக உள்ளனர். இவர்களது பயிற்றுவிப்பும் இவர்கள் பயன்படுத்தும் கற்றல் உபகரணங்களும் எங்கள் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதில் மிகவும் உறுதுணையாக உள்ளது. எனவே இவர்களது பணியும், வித்யாரம்பம் அறக்கட்டளையின் பயிற்றுவிப்பும் மேன்மேலும் தொடர வேண்டும் என வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு

தலைமையாசிரியர்
அரசு தொடக்கப் பள்ளி
முகிலன்குடி

## Kids

குழந்தைகள் 2 கதைகள் சொல்கிறார்கள். Matching picture, Pair card, Frieze cards, Foot print cards பயன்படுத்தப்பட்டுள்ளது. எண்கள் 10 வரை அடையாளம் காட்டுகிறார்கள். A……H வரை phonemes சொல்கிறார்கள்.







## Junior

ஆங்கிலத்தில் Phonemes, Blending process, Single letters தமிழில் (ஒரு எழுத்தில் ஆரம்பிக்ககூடிய வார்த்தைகள் ஒரு எழுத்தில் முடியும் வார்த்தைகள்) கணிதத்தில் - எண்கள், ஏறுவரிசை, இறங்கு வரிசை, பெரிய எண், சிறிய எண், இடமதிப்பு நடத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் ஏ ஓசை வரை எழுத்துகளை அடையாளம் காட்டுகிறார்கள். மனக்கணக்குகள் சொல்லவும் பயிற்றுனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.






## Senior

ஆங்கிலத்தில் - Phonemes, Blending Process, Single letters & Double letters, Homophones Noun and Verb வரை நடத்தப்பட்டுள்ளது.

தமிழில் - ஒரு வார்த்தையிலிருந்து பல வார்த்தைகள், சிறிய வாக்கியங்கள் எழுதுதல் (வார்த்தை அட்டை) மரபு ஒலி ஆகியவை குழந்தைகளுக்கு தெரிகிறது.

கணிதத்தில் - எண்கள், இடமதிப்பு, கூட்டல் வரை நடத்தப்பட்டுள்ளது. மாநிலங்களின் சின்னங்கள், கோள்கள் பற்றியும் நடத்தப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு (ெ ே ல ழ ள) உள்ள வார்த்தைகள், இடமதிப்பு, மனக்கணக்குகள் போன்றவைகளும் நடத்தப்பட்டுவருகிறது.












## VOCATIONAL AWARENESS PROGRAMS

**21.05.2025** அன்று **திருநெல்வேலி மாவட்டத்தில்** நமது வித்யாரம்பம் கிளை அலுவலகம், விஜய அச்சம்பாட்டில் வைத்து மின்சாரம் மற்றும் மின்சாரம் எப்படி கடத்தப்படுகிறது, எப்படி செயல்படுகிறது என்பதைப் பற்றி **திரு. கண்ணன் நல்லத்தம்பி அவர்கள், (Rtd. Electrical Engineer)** உபகரணங்கள் மூலம் பயிற்சி அளித்தார். 26 நபர்கள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் புரியும் வண்ணமாக அழகாக பயிற்சி கொடுத்தார்கள். இதில் Sponsor Mr. Himanshu Desai அவர்கள், Video call மூலம் பேசினார்கள்.





திரு. கண்ணன் நல்லத்தம்பி அவர்கள் மாதத்திற்கு ஒருமுறை Google meet மூலம் பயிற்றுனர்களை உற்சாகப்படுத்தினார்கள். வினாக்களை முன்கூட்டியே அனுப்பி வைத்து அதை ஒவ்வொருவரையும் சொல்ல வைத்தார்கள். அதுமட்டுமல்ல குழந்தைகளுக்கு வகுப்பு முடிந்தவுடன் புகைப்படம் Group -ல் போடும்போது, சில தவறுகளை திருத்துவார்கள். சில கேள்விகளை எழுப்பி பயிற்றுனர்களை சிந்திக்க வைத்தார்கள்.



**ஜுலை மாதம்**, Electric & Electronic வித்தியாசம் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. Battery & Voltage பயன்படுத்தும் முறை பற்றியும் குழந்தைகள் கற்றுக்கொண்டார்கள்.



**ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர்** மாதம் வீட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப்பற்றி பயிற்சி அளித்தார்கள். இது அறிவியல் project செய்வதற்கு மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருந்தது. Parallel and series முக்கியத்துவம் தெரிந்து கொள்ளப்பட்டது.





**அக்டோபர் மற்றும் நவம்பர்** மாதம் Speaker, Music, IC, Alarm, Siren, Sound, Pure water and Salt water, LA Current connect செய்து sound வித்தியாசம் பார்க்கப்பட்டது. காகிதம் பென்சில் காந்தத்தினை கொண்டு மின்சாரம் கடத்துதல் கற்றுக்கொடுக்கப்பட்டது. இதன்மூலம் பல்பு மாட்டுவதற்கு, மேலும் சிறியதாக இருக்கும் எலக்ட்ரிக்கல் பிரச்சினைக்கான காரணம் குறித்து பயிற்சி அளித்தார்கள். அறிவியலை பார்த்து பயந்த குழந்தைகள், பயத்தை நீக்கி அறிவியல் கண்டுபிடிப்புகள் காண project செய்தார்கள். மாணவர்கள் தங்களின் திறன்கள் மற்றும் ஆர்வத்திற்கேற்ப எவ்வகை தொழில்கள் உள்ளன என்பதை புரியவைக்கும் வகையில் நடத்தப்படும் நிகழ்ச்சியாக இது இருக்கிறது.





# The Rotary Central Vidyarambam Nursery And Primary School

**Annai Sathya Tsunami Rehabilitation Centre,**
**Samanthanpettai, Nagapattinam - 611003**

**மே 14,** அன்று **2025 – 2026 -**ம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்றது. இதில், வித்யாரம்பம் அறக்கட்டளையின் பொது மேலாளர் அவர்கள், நமது பள்ளியின் திட்ட இயக்குநர் அவர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் அவர்களும் இருந்தனர். மாணவர்களின் நுண்தசை வளர்ச்சி, பெருந்தசை வளர்ச்சி மற்றும் அறிவுதிறன் வளர்ச்சி போன்ற சோதனைகள் செய்த பின்பு மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது. இதன் அடிப்படையில் **LKG** மாணவர்கள் பள்ளியில் சேர்ந்தனர்.



**ஜுன் 02,** அன்று **2025 – 2026 -** ம் கல்வி ஆண்டிற்கான பள்ளி திறப்பு நடைபெற்றது. மாணவர்கள் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் வருகை புரிந்தார்கள்.



**ஜுன் 12, 2025 – 2026** - ம் கல்வி ஆண்டிற்கான **LKG** வகுப்பு திறக்கப்பட்டது. மாணவர்கள் தங்களது பெற்றோரை பிரியமனமில்லாமல் அழுது கொண்டே வகுப்பறைக்கு வந்தார்கள். மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக Mask, நடனம், பாடல், வீடியோ போன்ற செயல்பாடுகளை ஆசிரியர்கள் செய்தனர். பல பெற்றோர்கள் மாணவர்களின் கூடவே அமர்ந்திருந்து தங்களது குழந்தைகளை சமாதானபடுத்தினர்.





**ஜுன் 21,** அன்று **உலக யோகா தினம்** கொண்டாடப்பட்டது. நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் நடனமாக யோகா செய்து அசத்தினார்கள்.



**ஜுலை 1, மருத்துவர்கள் தினம்** அன்று **LKG** முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் அனைவரும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த வேடமணிந்து அவர்களின் முக்கியத்துவத்தை நாடகம், பேச்சுப்போட்டி, ஆகியவற்றை கொண்டு சக மாணவர்களுக்கும் செய்து காண்பித்தார்கள்.





**ஜுலை 7,** அன்று நமது பள்ளியில் **வனமகா உற்சவம் தினத்தை** முன்னிட்டு மாணவர்கள் மரங்கள், காடுகள், விலங்குகளின் முக்கியத்துவத்தை பற்றி நாடகம், பேச்சுபோட்டி, ஆகியவற்றை கொண்டு சக மாணவர்களுக்கு செய்து காண்பித்தனர். அதில் நாகை மாவட்ட தேசியப்படை ஒருங்கிணைப்பாளர் **திரு. முத்தமிழ் ஆனந்தன்** அவர்கள் வருகைப்புரிந்து குழந்தைகளுக்கு பரிசுவழங்கினார்.





**ஜுலை15,** அன்று **கல்வி வளர்ச்சி நாளில்** பெருந்தலைவர் காமராஜர் ஐயா பற்றி தகவல்களை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி நடைபெற்றது.

**ஆகஸ்ட் 07, BOOK FAIR** அன்று நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் புத்தக திருவிழாவிற்கு சென்று வந்தார்கள்.








**உலக சதுரங்க** தினத்தை முன்னிட்டு சிறப்பு சதுரங்க விளையாட்டுப்போட்டி வைக்கப்பட்டது. இதில் நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் பங்கு கொண்டு விளையாடினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் இந்தியாவில் அதிக செஸ் சாம்பியன்களை கொண்டது தமிழ்நாடு என்று மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.



**ஆகஸ்ட் 15, 78th (INDEPENDENCE DAY)** சுதந்திரத் தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. **திரு. முத்தமிழ் ஆனந்தன் (தேசியப்படை ஒருங்கிணைப்பாளர்)** கொடி ஏற்றி வைத்தார். மாணவர்கள் அவர்களின் தனித்திறமையை கொண்டு சக மாணவர்களுக்கும் எடுத்துரைத்தார்கள். பின்பு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. சுதந்திரப் போராட்ட தியாகிகளை போற்றும் விதமாக மாணவர்கள் மாறு வேடமிட்டு வந்தார்கள். சுதந்திரப் போராட்டப் பாடல்கள், வசனங்கள், நாடகங்கள் போன்றவற்றை சிறப்பாக செய்தார்கள்.





**ஆகஸ்ட் 20,** அன்று **Parents Meeting** நடைபெற்றது. மாணவர்கள் பள்ளியில் இருப்பது போல வீட்டிலும் அனுமதி கேட்டு எந்த ஒரு செயலையும் செய்கின்ற பழக்கவழக்கம் மிகவும் பெருமையாக இருக்கின்றது என்று பெற்றோர்கள் கூறினார்கள். நமது பள்ளியில் உள்ள நிறை, குறைகளை பெற்றோர்கள் கூறினார்கள். அதற்குரிய தீர்வினை முதல்வர் அவர்கள் எடுத்து கூறினார்கள்.



**ஆகஸ்ட் 25**, நமது பள்ளியில் படிக்கும் ஐந்தாம் வகுப்பு மாணவன் **சஸ்வின்** மற்றும் மூன்றாம் வகுப்பு படிக்கும் **நிரன்ஜனும்** மாவட்ட அளவில் நடைபெற்ற கராத்தே போட்டியில் முதல் மூன்று பரிசு பெற்றனர். அதனை இறைவணக்க கூட்டத்தில், மாணவர்களிடம் அறிவித்த பின்னர் அவர்கள் வாங்கிய மெடலை அவர்களுக்கு அனிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

**ஆகஸ்ட 27,** வித்யாரம்பம் பள்ளியின் தாளாளர் **திரு. வி. ரெங்கநாதன்** அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. பிறந்த நாளை முன்னிட்டு அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.



**செப்டம்பர் 10,** ஒவ்வொரு வருடமும் முதல் பருவத்தில் **Project day** செயல்படுத்தபடும். மாணவர்கள் பாடவாரியாக செயல்பாடுகளை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் செயல் படுத்திகாட்டினார்கள். இதனை, நமது பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் பார்வையிட்டு பாராட்டி சென்றனர்.

**செப்டம்பர் 16, ozone day** அன்று **உலக ஓசோன் தினம்** அனுசரிக்கப்பட்டு, காலை இறைவணக்கம் வழிபாட்டு கூட்டத்தில், ஓசோன் தினம் பற்றிய தகவல்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். வீட்டில் ஒரு செடி, மரம் நட்டு பாராட்ட வேண்டும் எனவும் கூறப்பட்டது.



மாலையில் சிறப்பு “ஓசோன் தினம்” ஓவியப்போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

ஓசோன் படலத்தில் ஏற்படும் மாசுபாடு மற்றும் அவற்றை பாதுகாப்பது பற்றியும் மாணவர்கள் சக மாணவர்களுக்கு அவர்களின் தனித்திறமை கொண்டு செய்து காட்டினார்கள்.

**செப்டம்பர்** 18, அன்று **முதல் பருவத்தேர்வு தொடங்கப்பட்டு** செப்டம்பர் 26 அன்று முடிவுற்றது.



**செப்டம்பர்** 23, மாணவர்கள் கொண்டு வந்த பொம்மைகளை கொண்டு கொலு வைக்கப்பட்டது.



**அக்டோபர்** 7, அன்று முதல் பருவத்தேர்வு விடுமுறை முடிந்து பள்ளி திறக்கப்பட்டது. விஜயதசமி கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு சுண்டல் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.



**அக்டோபர்** 15, **Dr. APJ அப்துல்கலாம்** அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

**அக்டோபர் 16,** அன்று சென்னையை சேர்ந்த **திரு. H. ஸ்ரீராம்** அவர்கள், **(IBS GULF Design Pvt. Ltd. )** புதியதாக இரண்டு **Smart Board –களை** நமது பள்ளிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். L.K.G, U.K.G மற்றும் 1ஆம் வகுப்பு குழந்தைகளுக்கு முதல் தளத்திலும் 2,3,4 மற்றும் 5ஆம் வகுப்பு குழந்தைகளுக்கு மேல் தளத்திலும் பொருத்தப்பட்டுள்ளது. மென் பொறியாளர் **திரு. பிரகாஷ் அவர்களால்** ஆசிரியர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளியின் முதல்வர் திருமதி. T. கார்த்திகா அவர்களும் கலந்துக் கொண்டார். கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களுக்கு **Smart Board -ஐ** குழந்தைகள் எவ்வாறு எளிமையாக பயன்படுத்துவது என்பது பற்றிய விளக்கமும் அளித்தார்கள்.

2D, 3D Shapes, Basic sum, Picture Interpretation ஆகியவற்றை Smart board-ல் எப்படி செய்வது, படங்கள் எவ்வாறு Upload செய்வது, ஒரு படத்தை எத்தனை கோணங்களில் காண்பிப்பது என்று விளக்கமளித்தார். Smart board பயன்படுத்துவது குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.



அறிவியல் பாடங்களில் Skull, Bones, Body Parts, Science Activities, Social Science பாடங்களுக்கு வரைபடம், Virtual video, மேலும் UNESCO அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாத் தளங்களுக்கு நேராக செல்லாமல் வகுப்பறையில் இருந்து கொண்டே அந்த இடத்தை எவ்வாறு காண்பது பற்றியும் செயல் விளக்கமாக காண்பிக்கப்பட்டது.


Google Earth, Maths Tools பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த Smart Board- ஐ வகுப்பறைகளில் தேவைப்படும் பொழுதெல்லாம் பயன்படுத்தி மாணவர்களின் நினைவாற்றலையும், பங்கேற்கும் ஆர்வத்தினையும் அதிகரிக்கலாம்.

மேலும் பாட வேளையில் திடீரென்று ஏற்படும் சந்தேகங்களுக்கு உடனடி தீர்வை இந்த Board மூலம் பெற்றுக்கொள்ள முடிகிறது.

குழந்தைகளுக்கு நல்ல நேர்மறை கருத்துடைய கதைகள், பாடல்கள், செய்திகள், அறிவியல் வித்தைகள், நாகப்பட்டினம் மாவட்டம் சார்ந்த தலைப்புகள், Globe, இயற்கை அமைப்புகள், பெருங்கடல்கள், எரிமலை சார்பான தகவல்கள் போன்ற எண்ணற்ற பாட பொருள் சார்பான வீடியோக்களை மாணவர்களுக்கு காண்பிக்க முடிகிறது.






**A proud moment for Vidyarambam Trust**

**Ms. Priyanka, who passed out of our school in the year 2014 has got admission into the Government Medical College.**





# Ways to Donate

**FOR INDIAN CURRENCY ₹ (INR)**

Donate via NEFT or RTGS to A/c Name: Vidyarambam Trust
ICICI Bank Ltd, Mount Road Branch, Chennai 600006
**SB A/c No: 603801089162,**
**IFSC Code: ICIC0006038**

***Donate via- UPI ID – vidyarambamtrust@icici***

***or scan the QR Code in the payment app***

**FOR OTHER CURRENCIES:**

State Bank of India, New Delhi
Main Branch (NDMB).
Name: Vidyarambam Trust

**SB A/c No: 40099019826,**
**IFSC Code: SBIN0000691**
**SWIFT Code: SBININBB104**

**FOR USA RESIDENTS:**

Vidyarambam USA is a **501(c)** (3) nonprofit organization, **EIN 87-3322677.** Donations are tax-deductible.

**To donate visit**
**www.vidyarambamusa.org**

## Donate generously to provide quality education to the less-privileged children of TamilNadu, India.

THANKYOU

